மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசான் | நாள் | 18.06.2024 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூசாரிகவுண்டர் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை :-**

1) தாவா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால், 2-1/2 ஏக்கர் ஆகும். தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்றால், என் தந்தை பெயரில் உள்ளது. மேற்படி 2-1/2 ஏக்கர் நிலத்தை தவிர வேறு ஏதேனும் நிலம் என் தந்தை பெயரில் இருந்ததா என்றால், இருந்தது. எவ்வளவு நிலம் இருந்தது என்றால், சுமார் 5 லிருந்து 6 ஏக்கர் இருக்கும். அதில் எவ்வளவு நிலத்தை என் மகன் பெயரில் என் தந்தை எழுதி வைத்ததாக நான் சொல்கிறேன் என்றால், அது குறித்து தற்போது எனக்கு சரியாக நினைவில்லை.

2) எவ்வாறு மேற்படி சொத்தை என் தந்தை என் மகனுக்கு அளித்தார் என்றால், உயில் மூலமாக அளித்தார். மேற்படி உயில் எழுதப்பட்டதாக நான் சொல்லும் சமயத்திலேயே அது குறித்து எனக்கு தெரியுமா என்றால், இல்லை. பின்னிட்டு என் மகன் கூறியதன் பேரில் மேற்படி உயில் குறித்து எனக்கு தெரியும். மேற்படி உயில் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன்.

3) மேற்படி உயில் பத்திரத்தை நான் பார்த்துள்ளதாக சொல்லும் நிலையில், அவ்வாறு என் தந்தைக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களில் எவ்வளவு நிலம் என் மகனுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க மேற்படி உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலாது.

4) மேற்படி உயில் ஆவணத்தில் எவ்வளவு நிலம் என் மகனுக்கு அளிக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாத நிலையில், தாவா சொத்து மட்டும் தான் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என நான் கூறி எவ்வாறு இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால், என் தந்தை கூறியதன் அடிப்படையில்தான், என் தந்தைக்கு தாவா சொத்து மட்டும் பாத்தியப்பட்டது என இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

5) நான் சொல்வது போல் என் தந்தை, என் மகன் பெயரில் எவ்வித உயிலும் ஏற்படுத்தவில்லை என்றாலும், அவ்வாறு உயில் ஏற்படுத்தியதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. என் மகன் பெயரில் உள்ள பட்டா நானும், என் மகனும் சேர்ந்து என் தந்தையை ஏமாற்றி மோசடியாக நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால், சரியல்ல.

6) என் தந்தை பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்து, 1940 முதல் 1986 வரையிலான காலகட்டத்திற்குரிய வில்லங்க சான்றிதழ்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி வில்லங்க சான்றிதழில் 1946 ம் வருடத்தில் ஒரு கிரயப்பத்திரத்தில் 2–1/4 நிலமும், 1976 ம் வருடத்தில் ஒரு கிரயப்பத்திரத்தில் 1 ஏக்கர் நிலமும் கிரயம் பெறப்பட்டுள்ள நிலையில், மேற்படி கிரய ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

7) மேற்படி 1946 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களை தான் என் தந்தை என் மகன் பெயரில் உயில் எழுதி வைத்தாரா என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. அவ்வாறுள்ள நிலையில், மேற்படி இரு கிரய ஆவணங்களிலும் கண்டுள்ள சொத்துக்களை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

8) என் தந்தை பெயரில் எந்தெந்த வருடங்களில், எந்தெந்த சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டது என்ற விவரமோ, மொத்தம் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்ற விவரமோ எனக்கு முழுமையாக தெரியாது என்றால், சரிதான். என் தந்தை பெயரில் 1946, 1968, 1976 ஆகிய மூன்று ஆண்டுகளில் பெறப்பட்ட கிரய சொத்துக்கள் உள்ளது என்றாலும், அதில் இவ்வழக்கில் 1968 ம் வருட கிரய ஆவணத்தின்படி

பாத்தியப்பட்ட கிரய சொத்தை மட்டும் தான் இவ்வழக்கில் நான் காண்பித்துள்ளேன் என்றாலும், மற்ற இரண்டு சொத்துக்களையும் இவ்வழக்கில் நான் சேர்க்காததால், என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

9) எனது தந்தை சுருட்டையன் (எ) பூவிரிசாகவுண்டர் என் சகோதரர் மாணிக்கம் குடும்பத்தினரை பாதுகாக்க வேண்டி சொத்தை எழுதி வைத்தார் என நான் சொல்லியுள்ள நிலையில், எந்த சர்வே எண்ணில் உள்ள, எவ்வளவு சொத்தை எழுதிக் கொடுத்தார் என்றால், 1.07 ஏக்கர் நிலத்தை எழுதி வைத்தார். பட்டா எண், சர்வே எண் எனக்கு தெரியாது. நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தபோது கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து மேற்படி மாணிக்கம் குடும்பத்தினரை பாதுகாக்கவேண்டி சொத்தை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் வாங்கி வைத்தார். என் தந்தை பெயரில் இருந்த எந்த சொத்துக்களையும் எழுதி கொடுக்கவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

10) மேற்படி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரில் எப்போது சொத்து வாங்கப்பட்டது என்றால், குறிப்பாக தேதி, மாதம், வருடம் நினைவில்லை. மேற்படி சொத்து எங்களது கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டதாக நான் சொல்கிறேனா? என்றால், ஆமாம். மேற்படி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிளின் தாயார் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

11) 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரிலுள்ள நிலத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. மேற்படி மாணிக்கம் மற்றும் அவரது மனைவி சந்திரா ஆகியோர்களின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து பெறப்பட்டது என்றால், சரியல்ல.

12) நானும், என் மகனும் என் தந்தையின் தனிப்பட்ட சொத்துக்களை மோசடியாக என் மகன் பெயரில் பட்டா பெற்றக்கொண்டதால் தான், 1 முதல் 3 வரையிலான

பிரதிவாதிகளின் தாயார் பெயரில் உள்ள சொத்துக்களையும், 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் தாயார் பெயரிலுள்ள சொத்துக்களையும் அவர்களது பராமரிப்பிற்காக நாங்கள் வாங்கி வைத்ததாக பொய்யாக சொல்கிறோம் என்றால், சரியல்ல.

13) என் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் மொத்தம் 8 நபர்கள் என்றால், சரிதான். என் தந்தை சொத்தை பொறுத்தவரையில் அவரது 8 வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கில் என் உடன் பிறந்த சகோதரிகள் யாரையும் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளேன். இவ்வழக்கில் என் சகோதரிகள் ஆஜராகியுள்ளனரா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் சகோதரிகளுக்கும், எனக்கும் பேச்சுவார்தை உள்ளதா என்றால், உள்ளது. என் சகோதரிகள் என் தந்தை சொத்துக்களில் பாகம் பிரித்து தர கோரினால், அதை வழங்குவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால், இல்லை. சட்டபடி அவர்களது பாகத்தை கொடுக்க நான் தயாராக உள்ளேன்.

14) என் சகோதரிகளை இவ்வழக்கில் சேர்க்காமல், பாகபிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள விவரத்தை எப்போதாவது நான் அவர்களிடம் சொல்லியுள்ளேனா என்றால், அவர்கள் கேட்கவும் இல்லை, நான் சொல்லவும் இல்லை. என் சகோதரிகளுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள விவரமே தெரியாது என்றாலும், நான் தான் மேற்படி விவரத்தை அவர்களிடம் சொல்ல கடமைப்பட்டுள்ளேன் என்றாலும், சரியல்ல.

15) என் தந்தை இறக்கும் சமயத்தில் எத்தனை சகோதரிகளுக்கு திருமணம் செய்யப்பட்டது என்றால், அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. கடந்த 23.01.2024 ம் தேதியில் என் முந்தை குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பத்தி–25 ல் என் தந்தை இறந்ததற்கு பின்னிட்டு சிலருக்கு திருமணம் ஆனது என நான் சொல்லியுள்ளது தவறானதா என்றால், அவ்வாறு நான் சொன்னேனா என்பது குறித்து சரியாக எனக்கு நினைவில்லை.

16) என் சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால், அவசியமான தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினால் என் வழக்கு தள்ளுபடி செய்ய அருகதை உடையது என்றால், சரியல்ல. ஏற்கனவே அவர்களுக்கு தேவையான சீர்வரிசைகள் செய்யப்பட்டுவிட்டதால், அவர்கள் பாகம் எதுவும் கேட்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

17) என் சகோதரிகளுக்கு என்ன சீர்வரிசை செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும், அவர்கள் பாகம் கோருகிறார்களா இல்லையா என்ற விவரமும், அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து விசாரித்தால் தான் தெரியவரும் என்ற நிலையில், அவர்களை இவ்வழக்கில் சேர்க்காததால், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. அதேபோல், என் தந்தைக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துக்களையும் இவ்வழக்கில் சேர்க்காததால், என் வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.